தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 3 திகதி: 29.11.2025

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி நிர்மலா தயாளன்

திருமதி கற்கதாரணி சஞ்ஜீவன்

உதவி ஆசிரியர்: செல்வி விஜயாள் விஜய்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	15	
வினா 3	15	
வினா 4	20	
வினா 5	10	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	3

பின்வரும் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஞாயிற்றுக்கிழமை பரதனின் குடும்பத்தினர் பிரபுவின் குடும்பத்தினருடன் சேர்ந்து கடற்கரைக்கு செல்லத் தயாரானார்கள்.

பிரபு அவனது அண்ணா , அக்காவுடன் சேர்ந்து கடற்கரையில் இளைப்பாறத் தேவையான பொருட்களைப் பட்டியலிட்டான். தரைவிரிப்பு, சிற்றுண்டி வகைகள், இனிப்புக்கள், தண்ணிர், குளிர் பானங்கள் என்பன அவர்களது பட்டியலில் இருந்த பொருட்கள். பரதன் தனது தம்பி தங்கைகளுடன் சேர்ந்து மண்வீடு கட்டுவதற்கான பட்டியலைத் தயார் செய்தான். அதில் இருந்த பொருட்கள் நீச்சல் உடை, வாளி, கரண்டி, தொப்பி, குடை.

1) யார் கடற்கரைக்கு செல்லத் தயாரானார்கள் ?

_____

2) எப்போது கடற்கரைக்கு செல்லத் தயாரானார்கள்?

_____

3) பிரபுவின் சகோதரர்கள் யாவர்?

_____

4) பரதன் தனது சகோதரர்களுடன் சேர்ந்து தயாரித்த பட்டியலில் இருந்த பொருட்கள் எவை?

_____

5) இளைப்பாறத் தேவையான பட்டியலில் இருந்த பொருட்கள் எவை?

_____

வினா இல	2	புள்ளிகள்	15	பக்கம்	4

சரியான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுங்கள்.

1) *அவள் நிதானமாக* _____
(நடந்தாள், நடந்தார்கள், நடந்தான்)

2) *நேற்று அரன் பாட்டு* _____
(பாடுவான், பாடினான், பாடுகிறான்)

3) *நாளை நாங்கள் பாடசாலைக்கு* _____
(போவேன், போனோம், போவோம்)

4) *நேற்று மாமாவும் அப்பாவும் சந்தைக்குச்* _____
(செல்வார்கள், சென்றார், சென்றார்கள்)

5) *அவர்கள் நேற்று மைதானத்தில்* _____
(விளையாடுவார்கள், விளையாடினார்கள், விளையாடுகிறார்கள்.)

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	4

சேர்த்து எழுதுங்கள்.

1) *வாழை* + *மரம்* _____

2) *மாரி* + *காலம்* _____

3) *கடல்* + *அலை* _____

4) *நீர்* + *ஓடை* _____

5) *மனம்* +*இல்லை* _____

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	5

கோடிட்ட சொற்களை ஆண்பாலாக மாற்றி வசனத்தை எழுதுங்கள்.

1) *தங்கை படம் பார்க்கிறாள்.*

_____

2) *மாணவி நாடகத்தில் நடிக்கிறாள்.*

_____

3) *சித்தி வேலை செய்கிறாள்.*

_____

4) *சிறுமி மெதுவாக நடந்தாள்.*

_____

5) *தையல்காரி அழகான ஆடையை தைத்தாள்.*

வினா இல	5	புள்ளிகள்	10	பக்கம்	6

பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.

1) சந்தோசம், இன்பம், மகிழ்ச்சி, சோகம்

2) மாணவி, தலைவி, அரசி, காவற்காரன்

3) எதிர்காலம், இலையுதிர் காலம், வசந்தகாலம், கோடைகாலம்

4) தீபாவளி, புத்தாண்டு, தைப்பொங்கல், அவுஸ்திரேலிய தினம்

5) பாடுவேன், ஆடுவேன், நடித்தேன், படிப்பேன்

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	7

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 5 வசனங்கள் எழுதுக.

1) வாரத்தில் நீங்கள் செய்ய விரும்பும் செயல்கள்.

2) உங்களுக்கு விருப்பமான பண்டிகை அல்லது விழா.

3) உங்களுக்குப் பிடித்த பருவ காலம்.